முருகப்பெருமான் துணை

**மகான் கௌதமர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**28.01.2024,** ஞாயிற்றுக்கிழமை

1. நல்லெண்ணம் நன்னடத்தையாக
ஞாலமதில் மக்கள் பண்புற
வல்லமைமிக்க ஜீவதயவு காட்டி
வழிநடத்தும் ஞான வள்ளலே
2. வள்ளலே ஆறுமுக அரங்கனே
வையகத்தில் உன்பெருமை கூறி
துல்லிய ஆசிதனை கௌதமரும்
தெரிவிப்பேன் சோபகிருது கலைதிங்கள்
3. திங்களிலே முன்னான்கீர் திகதி கதிர்வாரம்
(சோபகிருது வருடம் தை மாதம் 14 ம் நாள், 28.01.2024, ஞாயிற்றுக்கிழமை)
தேசமெல்லாம் பாதுகாப்புற உரைப்பேன்
ஓங்கார ஞானமும் ஜீவகாருண்யம்
உலகமேற்க இனிதே பரவிட
4. பரவிட மக்களின் நடத்தைகள்
பண்பான வழிகளாக மாறி
துறவி அரங்கமகான் மகிமையை
தேடிக் கண்டடையும் வாய்ப்பும்
5. வாய்ப்புடன் சரணாகதி பெருகி
வடிவேலனார் வழிபாடுமாகி
மெய் ஞானம் அடையும்படி
மேலான அன்னதான சேவை
6. சேவையும் கைவரப் பெற
சிறப்பான தரும சேவை ஆற்றி
அவனியில் தான தருமபலமிக்க
அரங்கன் மெய் சீடர்களாக
7. ஆகவே அடையாளம் கூடி
அகிலமதை மாற்றும் வண்ணம்
மகா சேவை ஆற்றி மக்களை
மண்ணுலகமெங்கும் ஒன்றிணைத்து

8. இணைத்துமே ஞானப்படைகளாக
எந்த பேதமும் கருதிடாத
இணையிலா சமத்துவ தர்மம்
எங்கும் நிலைபெறும் வண்ணம்

9. வண்ணமுடன் நல்லத் தலைமையை
வரலாறு போற்றும் ஞானத்தலைமையை
அண்ணல் அரங்கன் ஆசிபட
அகிலத்தில் உருவாக்கி அற்புதம்

10. அற்புதம் படைப்பர் கலியின்
ஆன்மீக ஞானப் படைகளாகி
ஏற்பு கொண்ட உலகினில்
ஏக ஜோதி சரவண ஜோதியாக

11. ஆகவே ஆறுமுகப்பெருமான் வெளிப்பட
ஆளுமை ஞானசித்தர் காலமாக
மகான்களின் ஞான ஆட்சியுமாக மாறும்
மொழிந்திட்ட துல்லிய ஆசி முற்றே

–சுபம்–